SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியனஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் கார்த்திகை 3 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 15
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● திங்கள்கிழமை, நவம்பர் 18, 2024 ● வெளியூர்: 19-11-2024, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 131 ● 6 பக்கம் ● ரூ.6

# சென்னை கிண்டியில்

# 16வது நிதி ஆணையக்குழுவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

## தமிழ்நாடு வளர்ச்சி பாதையில் செல்ல வரி பகிர்வை மாற்றி அமைக்க கோரிக்கை




**சென்னை, நவ. 18-**

சென்னை கிண்டியில் 16வது நிதி ஆணையக்குழுவுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து ஆலோசனை நடத்தினார். நிதி ஆணையக்குழு தலைவர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான குழுவினர் 4 நாட்கள் பயணமாக தமிழகம் வந்துள்ளனர்.

வரி வருவாயில் தமிழ்நாட்டிற்கான நிதிப்பகிர்வு சதவீதம் குறித்து மத்திய நிதி ஆணையக்குழுவினருடன் முதலமைச்சர் ஆலோசனை நடத்தினார். ஆலோசனை கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரை முருகன், தங்கம் தென்னரசு, கே.என்.நேரு உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: கூட்டாட்சி தத்துவத்தை பயன்படுத்தி மாநிலங்கள் தங்களது தேவையை நிறைவேற்றி கொள்கின்றன. 15வது நிதி ஆணைய குழு பரிந்துரைப்படி மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கும் வரி வருவாயை 41 சதவீதமாக உயர்த்தியதை வரவேற்கிறோம். முக்கிய திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அரசுகளின் பங்களிப்பு முக்கியம் ஆகும். தமிழகத்திற்கான வரி பகிர்வு தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதியை அளிப்பதன் மூலம் வளர்ச்சியை தக்க வைக்கலாம். தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சி பாதையில் செல்ல வரி பகிர்வை மாற்றி அமைக்க வேண்டும்.

இயற்கை பேரிடர்களின் தாக்கத்தால் தமிழகம் பெரும் பேரழிவை சந்தித்து வருகிறது. அறிவிப்பிற்கு மாறாக 31 சதவீத வரி வருவாய் மட்டுமே மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு அளிக்கும் வரி வருவாய் குறைவதால் மாநில அரசுகளுக்கு பெரும் சுமை ஏற்பட்டுள்ளது. வரி வருவாயில் 50 சதவீதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். வளர்ந்த மாநிலங்களை பாதிக்காத வகையில் பின்தங்கிய மாநிலங்களுக்கு உரிய நிதி தர வேண்டும். முதியவர்கள் அதிகமாக உள்ள மாநிலமாக தமிழகம் மாறும் அபாயம் உள்ளதை கருத்தில் கொண்டு நிதி வழங்க வேண்டும். மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு 50 சதவீதமாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலங்கை பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவியேற்பு



**கொழும்பு, நவ. 18-**

கடந்த 14ந் தேதி நடந்த இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் அதிபர் அனுரா குமார திசநாயகாவின் கட்சி வரலாறு காணாத வெற்றி பெற்றது. இதையடுத்து, இலங்கையின் புதிய மந்திரிசபை இன்று பதவியேற்றது. அதிபர் செயலகத்தில் அதிபர் திசநாயகா முன்னிலையில் இன்று காலை 10 மணியளவில் பதவியேற்பு விழா நடைபெற்றது.

இந்த நிலையில் இந்த பதவியேற்பு விழாவில் இலங்கையின் புதிய பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவியேற்றார். மேலும் அதிபர் திசநாயகா முன்னிலையில் புதிய அமைச்சரவையும் பதவியேற்றது. இதில் இலங்கையின் வெளிவிவகாரத் துறை மந்திரியாக விஜித ஹேரத் பதவியேற்றுக் கொண்டார். மகளிர் மற்றும் சிறுவர் நலத் துறை மந்திரியாக சரோஜா சாவித்திரி பால்ராஜ் பதவியேற்றார். கடற்தொழில் நீரியல் வழங்கல் மந்திரியாக ராமலிங்கம் சந்திரசேகரன் பதவியேற்றார். இலங்கையின் 10 வது நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் 21ந் தேதி தொடங்குகிறது.

## வரும் தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைவதற்கான சூழல் இல்லை: திருமாவளவன்



**புதுச்சேரி, நவ. 18-**

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. புதுச்சேரியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

விடுதலை சிறுத்தை கட்சியினர் உட்கட்சி விவகாரங்களை சமூக வலை தளங்களில் வெளியிட வேண்டாம். இதனால் கட்சி வளர்ச்சிக்கு தடை ஏற்படுகிறது. இக்கட்சி அனைத்து விளிம்பு நிலை மக்களுக்காக போராடும் சமூக பண்பாட்டு தளத்தை இயக்கும் இயக்கமாக உள்ளது.

தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று தி.மு.க. அல்லது அ.தி.மு.க. சொல்கிறது என்றால், அது நடைமுறைக்கு சாத்தியமானது. கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் தங்கள் விருப்பத்தை சொல்வது தற்போதைய சூழலில் சாத்தியமானதா? என்ற கேள்வி எழுகிறது. 2026ல் வரும் தேர்தலில் கூட்டணி ஆட்சி அமைவதற்கான சூழல் இல்லை. இப்போது தான் கூட்டணி தொடக்கப் புள்ளியாக உள்ளது. எனவே வரும் தேர்தலில் காலம் கனியும் என்றும் சொல்ல முடியாது. அ.தி.மு.க. கூட்டணி அழைப்பதாக அதிகாரப்பூர்வமாக கருத்து தெரிவிக்கவில்லை. கட்சியில் விவாதித்தார்களா? என்ற தகவல் இல்லை. யூகத்தின் அடிப்படையில் எதையும் சொல்லிவிட முடியாது.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தி.மு.க. கூட்டணி இணைந்து செயல்பட்டு உள்ளது. மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை உருவாக்கியதிலும், இந்தியா கூட்டணியை உருவாக்கியதிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பங்கு உண்டு. அந்த கூட்டணியை மாநில அளவிலும், தேசிய அளவிலும் பாதுகாப்பதும், வலுப்படுத்துவது விடுதலை சிறுத்தைகளின் நோக்கமும், கடமைகளுள் ஒன்று. எங்கள் கட்சி தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறாது. ஆனால், வெளியேறுவது போன்ற தோற்றத்தை சிலர் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## தங்கம் விலை சவரனுக்கு ரூ.480 உயர்வு

**சென்னை, நவ. 18-**

தங்கம் விலை கடந்த செப்டம்பர் மாதத்தில் கிடுகிடுவென உயரத் தொடங்கியது. அந்த மாதம் 24ந்தேதி ஒரு சவரன் ரூ.56 ஆயிரத்தை கடந்தது. தொடர்ந்து ஏற்ற, இறக்கத்துடன் கடந்த அக்டோபர் மாதம் தங்கம் இருந்த நிலையில், கடந்த மாதம் 16 ந்தேதி ஒரு சவரன் ரூ.57 ஆயிரத்தையும் தாண்டியது. அடுத்த 3 நாட்களில் ஒரு சவரன் ரூ.58 ஆயிரம் என்ற உச்சத்தையும் தொட்டது.

அதன் பிறகும் விலை குறைந்தபாடில்லை. மேலும் அதிகரித்தே காணப்பட்டு, கடந்த மாதம் 29ந்தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரம் என்ற வரலாறு காணாத உச்சத்தையும் எட்டியது.

இப்படியே நீடித்தால் ஒரு சவரன் ரூ.60 ஆயிரத்தையும் கடந்துவிடும் என்றே சொல்லப்பட்டது. விலை உயர்வு பலருக்கும் அதிர்ச்சியையே கொடுத்தது. எப்போதுதான் விலை குறையும்? என்ற எதிர்பார்ப்பையும் கொடுத்தது.

இந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் கடந்த 2ந்தேதியில் இருந்து விலை சற்று குறையத் தொடங்கியது. எந்த அளவுக்கு தங்கம் விலை உயர்ந்ததோ, அந்த அளவுக்கு குறைந்து வருகிறது.

சென்னையில் நேற்று தங்கத்தின் விலை சவரன் ரூ.55 ஆயிரத்து 480க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.480 உயர்ந்து ரூ.55 ஆயிரத்து 960க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 உயர்ந்து ரூ.6,995க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.99க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## மணிப்பூர் கலவரம்: இம்பாலில் ஊரடங்கு அமல்; முதல்-மந்திரி வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு




**இம்பால், நவ. 18-**

மணிப்பூரில் மெய்தி இன சமூகத்தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஆண்டு மே மாதம் மோதல்கள் ஏற்பட்டன. இது வன்முறையாக பரவியதில் இரு தரப்பிலும் 240 பேர் கொல்லப் பட்டனர். வன்முறையை தொடர்ந்து, 60 ஆயிரம் பேர் வேறு இடங்களுக்கு புலம் பெயர்ந்து சென்றனர். இதனை தொடர்ந்து, ராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், பல மாதங் களுக்கு பின்னர் மணிப்பூரின் பல்வேறு பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது. போ ராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2 பெண்கள், ஒரு குழந்தை உள்பட 6 பேர் பலியானார்கள். இதனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு இடங்களிலும் வன்முறையில் ஈடுபட்டனர். இதில், முதல்மந்திரி பைரன் சிங்கின் வீட்டை கும்பல் ஒன்று முற்றுகையிட முயற்சித்தது.

இதனால், பாதுகாப்பு படையினர் அந்த பகுதியில் குவிக்கப்பட்டனர். அவர்கள், ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப் படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதுதவிர, 3 மந்திரிகள் மற்றும் 6 எம்.எல்.ஏ.க்களின் வீடுகளையும் அந்த கும்பல் தாக்கியது. அவர்களின் சொத்துகளையும் சூறையாடியது. இதன் தொடர்ச்சியாக, இம்பால் கிழக்கு மற்றும் இம்பால் மேற்கு, பிஷ்ணுப்பூர், தவுபால் மற்றும் காக்சிங் உள்பட 7 மாவட்டங்களில் இணையதள சேவையை மணிப்பூர் அரசு இன்று சஸ்பெண்டு செய்துள்ளது.

மணிப்பூரில் 6 பேர் படுகொலையான சம்பவம் எதிரொலியாக, இம்பால் மேற்கு மற்றும் இம்பால் கிழக்கு மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டு உள்ளது. பாதுகாப்பு படை வீரர்கள் குவிக்கப்பட்டு உள்ளனர். இதனால், தெருக்களில் வாகன போக்குவரத்தும் குறைந்து காணப்படுகிறது.

முதல்-மந்திரி பைரன் சிங்கின் வீடு மற்றும் கவர்னர் மாளிகையை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. இந்நிலையில், நாகலாந்து பிரதேச காங்கிரஸ் கமிட்டி சார்பில் இதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சட்டம் மற்றும் ஒழுங்கை மீண்டும் கொண்டு வருவதற்கான உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகயை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

இந்நிலையில், வீடுகளை முற்றுகையிட்டு, தீ வைப்பு சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலை சேர்ந்த 23 பேரை மணிப்பூர் போலீசார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து கைத்துப்பாக்கி, தோட்டாக்கள், 8 மொபைல் போன்கள் உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த சூழலில், அடுத்த உத்தரவு வரும் வரை இம்பால் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இதன் தொடர்ச்சியாக உடனடி யாக, 2 நாட்களுக்கு இணைய தளம் மற்றும் மொபைல் வழியேயான இணையதள சேவைகள் சஸ்பெண்டு செய்யப்பட்டு உள்ளன.

# ஸ்ரீவேம்படி சுடலை மாட சுவாமி கோவிலில் சிறப்பு பூஜை



தூத்துக்குடி, நவ. 18-

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி புதுக்கிராமத்தில் ஸ்ரீவேம்படி சுடலை மாட சுவாமி கோவிலில் ஐப்பசி மாத கடைசி வெள்ளி சிறப்பு பூஜை கோவில் அறங்காவலர் குழு தலைவர் எம்.மகேஸ்பாலா தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கோவில்பட்டி நகர் மன்ற உறுப்பினர் எம்.ஆர்.வி கவியரசன் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்துவிட்டு அன்னதானத்தை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கோவில் அறங்காவலர் குழு செயலாளர் எல்.சோலை, பொருளாளர் எஸ்.மாரியப்பன், கோவில் பூசாரி ஏ.சுடலைமணி மற்றும் பக்தர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# வாக்காளர் சிறப்பு முகாம்



தூத்துக்குடி, நவ. 18-

கயத்தாறு பேரூராட்சியில் உள்ள பள்ளியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வாக்காளர் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இந்த பள்ளியில் 8 வாக்குசாவடிகளுக்கான வாக்காளர் சிறப்பு முகாமில் புதிய வாக்காளர்களை சேர்த்தல், திருத்தம், முகவரி மாற்றம், இறந்து போனவர்கள், வெளியூர் சென்றவர்கள், வெளிநாடு சென்றவர்கள், நீக்குதல் உட்பட பல்வேறு வகையான பணிகள் நடந்து நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளை முன்னாள் செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சரும், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் செ.ராஜ் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியின்போது கலந்து கொண்டவர்கள் கயத்தாறு அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் செல்வகுமார், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி முன்னாள் எம்எல்ஏ சின்னப்பன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கவியரசன், கயத்தார் ஒன்றிய மாணவரணி செயலாளர் நவநீதகிருஷ்ணன், கயத்தார் நகரச் செயலாளர் கப்பல் ராமசாமி, மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# சேலம் ஸ்ரீராஜ கணபதி கோயிலில் சுபமுகூர்த்த கால் விழா



சேலம், நவ. 18-

சேலம் ஸ்ரீ ராஜ கணபதி கோயில் மண்டபம் சுபமுகூர்த்த கால் விழா கோயில் வளாகத்தில் நடைப்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் அறங்காவலர்கள் குழுத்தலைவர் சோனா வள்ளியப்பா, அறங்காவலர்கள், பங்கேற்றனர். முன்னதாக சிறப்பு பூஜைகள் நடைப்பெற்றது தொடர்ந்து கோயில் மண்டபம் சுபமுகூர்த்தகால் விழா நடைப்பெற்றது. பின்னர் அனைத்து பக்கதர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த பணியானது சோனா கல்வி குழுமத்தின் தலைவர் வள்ளியப்பா தனது சொந்த செலவில் ரூ.24.75 லட்சம் மதிப்பிட்டில் அரசு அனுமதி பெற்று திருப்பணிகள் துவக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பேசிய அறங்காவலர்கள் குழுத்தலைவர் சோனா வள்ளியப்பா ஸ்ரீ ராஜ கணபதி கோயில் மண்டபம் சுபமுகூர்த்தகால் விழா சிறப்பாக நடைப்பெற்றது. மேலும் இந்த பணிகளை விரைந்து முடிக்க முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் இந்த நிகழ்வில் பங்கேற்ற தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரனுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அரசு அலுவலர்கள், அறங்காவலர்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள், அர்ச்சகர்கள், சோனா கல்வி குழுமத்தின் முதல்வர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# வாக்காளர் சிறப்பு முகாம்



இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2025ஐ முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தாணி ஊராட்சி, சிதம்பரவிடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குச்சாவடியில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமினை, மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்த முகாம்



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் குன்னூர் ஆ.தி.ந. அரசு மேல்நிலைப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத்திருத்த முகாம் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய முதன்மை செயல் அலுவலர், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் டாக்டர் மகேஸ்வரி, மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷஜீவனா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# மாணவர்களுக்கு சமைக்கப்பட்ட உணவை ஆட்சியர் ஆய்வு



கடலூர், செம்மண்டலம் அரசு தொழிற்பயிற்சி மாணவியர் விடுதி (பிற்படுத்தப்பட்டோர் நலம்) செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்து, மாணவர்களுக்கு சமைக்கப்பட்ட மதிய உணவினை சாப்பிட்டு பார்த்து ஆய்வு செய்தார்.

# சர்ச்சைகளுக்கு மத்தியில் டெல்லியில் பிறந்தநாளை கொண்டாடிய நயன்தாரா

புதுடெல்லி, நவ. 18-

தென்னிந்திய திரை உலகில் முன்னணி கதாநாயகியாக திகழ்பவர் நயன்தாரா. விக்னேஷ் சிவனை காதலித்து திருமணம் செய்து கொண்ட நயன்தாராவுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் நயன்தாராவுக்கு இன்று 40வது பிறந்தநாள். அவரது பிறந்த நாளையொட்டி நயன்தாராவின் சினிமா வாழ்க்கை மற்றும் காதல் திருமணத் தொகுப்புகள் ஆவணப்படமாக நெட்பி ளிக்ஸ் தளத்தில் இன்று வெளியாகி இருக்கிறது. முன்னதாக படம் பற்றி சில தினங்களுக்கு முன்பு வெளியான 3 நிமிட புரோமோவில் நானும் ரவுடிதான் படத்தின் காட்சிகள் எனது அனுமதியின்றி வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு நஷ்டஈடாக ரூ.10 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என தனுஷ் தனக்கு நோட்டீஸ் அனுபியதாக நயன்தாரா நேற்று முன்தினம் கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த சம்பவம் திரையுலகில் பெரும் பரபரப்பை உருவாக்கியது. சர்ச்சைகளுக்கு மத்தியில் நயன்தாரா இன்று தனது பிறந்த நாளை டெல்லியில் குடும்பத்துடன் கொண்டாடி னார். முன்னதாக நேற்று மாலை டெல்லியில் உள்ள பிரபல சுற்றுலா தலமான 'குதுப்மினாரை' கணவர் விக்னேஷ் சிவன் மற்றும் குழந்தைகளுடன் சுற்றிப்பார்த்தார்.

நயன்தாராவை கண்டதும் ஏராளமான பொதுமக்கள் உற்சாகம் அடைந்து அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர். நயன்தாராவும் பொதுமக்களிடம் ஆர்வமுடன் கை குலுக்கி பேசி மகிழ்ந்தார். இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# நடமாடும் உணவு வணிகர்களுக்கான உணவு பாதுகாப்பு அடிப்படை பயிற்சி



தருமபுரி, நவ. 18-

தர்மபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை சார்பாக சிறு, நடமாடும் மற்றும் சாலையோர சிற்றுண்டி, பானிபூரி, துரித உணவு (பாஸ்ட் புட்) சில்லி சிக்கன், சிப்ஸ் உள்ளிட்ட உணவு வணிகர்களுக்கான உணவு பாதுகாப்பு அடிப்படை பயிற்சி மற்றும் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் காரிமங்கலம் வட்டம், மொரப்பூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கம்பைநல்லூரில் கடை வீதி வாசவிமகால் அரங்கில் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர்கள் நந்தகோபால், அருண், திருப்பதி ஆகியோர் முன்னிலையில் உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா தலைமையில் இந்திய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தால் அங்கீகாரம் பெற்ற பயிற்சி பார்ட்னர் இ.பி. இன்போவேஸ் பிரைவேட் லிமிடெட் (EP Infoways Pvt. Ltd.,) பயிற்றுனர் சலீம், பங்கேற்று உணவு வணிகர்களுக்கு பயிற்றுவித்தார். பயிற்சியில் சிறு, நடமாடும் உணவு வணிகர்கள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் தன்சுத்தம், சுற்றுப்புற சுத்தம், கவச உடை, மேலங்கி, தலைஉரை, கை உரை, பொருள் மேலாண்மை, பொருட்கள் வாங்குதல், இருப்பு வைத்தல், தயார் செய்தல், கையாளுதல், பரிமாறுதல், மேலும் பூச்சிகள் கட்டுபாடு, நான்கு விதமான பொருட்கள் கெடுவதற்கான சூழ்நிலைகள் தவிர்த்தல், குடிநீர் தன்மை, உணவு பொருள் பாக்கெட்டுகளில் காண வேண்டிய விவரங்கள் குறித்தும், குளிர் பதன பெட்டிகளில் பால் பொருட்கள் மற்றும் இறைச்சிகள் வைத்திருக்க வேண்டிய குளிர்நிலை குறித்தும் தெளிவாக விளக்கினார். பவர் பாயிண்ட் மூலமாகவும் பயிற்றுனர் காட்சிப்படுத்தினார். மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா, தலைமை உரையில் மாவட்டத்தில் உணவு வணிகர்கள் உணவு பொருள்களை சுத்தமாக, தரமானதாக தயார் செய்யவும், உணவினால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கவும் இப்பயிற்சி பெரு உதவியாக இருக்கும் என்றார். மேலும் இனி நடமாடும் உணவு வணிகர்களுக்கான உணவு பாதுகாப்பு சான்றிதழ் பெற வருட கட்டணம் ரூ.100 விலக்கு அளிக்கப்படுகிறது.

5 ஆண்டுகள் வரை நடமாடும் உணவு வணிகர்கள் புதியது மற்றும் புதுப்பித்தல் உணவு பாதுகாப்பு சான்றிதழ் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

மாவட்டத்தில் அனைத்து உணவு வணிகர்களும் உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம் எனவும், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை கண்டிப்பாக தவிர்க்கவும் மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி கவர்கள், பொருள்களை உபயோகப்படுத்த கூடாது என வலியுறுத்தினார். உணவு பாதுகாப்பு சார்ந்த மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் குறித்த புகார்களுக்கு 9444042322 என்ற எண்ணிலோ, உணவு பாதுகாப்பு புகார் ஆப் செயலி மூலமாகவோ தெரிவிக்கலாம் என தெரிவித்தார். பயிற்சி முகாமில் காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்நகோபால் பேசும்போது உணவுப் பொருட்களில் வீட்டளவில் எளிய முறையில் கலப்படம் கண்டறிதல் செயல் விளக்கம், குறிப்பாக தேயிலை, தேன், சாயம் ஏற்றப்பட்ட பட்டாணி, நெய் மற்றும் அயோடின் உப்பு, அயோடின் இல்லாத உப்பு வேறுபாடு குறித்து நேரடி செயல்விளக்கம் உணவுப் பொருட்களைக் கொண்டு செய்து காட்டினார். மேலும் உணவு பொருள் பாக்கெட்டில் காண வேண்டிய அம்சங்களான உணவு பொருள் பெயர், தயாரிப்பு முகவரி, தயாரிப்பு தேதி, முடிவு தேதி, எடை, விலை, உணவு பாதுகாப்பு உரிமம் எண், உட்காரணிகள், ஊட்டச் சத்து தகவல்கள், அலர்ஜி காரணிகள், சைவ அசைவ குறியீடு, நுகர்வோர் தொடர்பு எண். உள்ளிட்டவை குறித்தும் வணிகர்களுக்கு விழிப்புணர்வு செய்தார்.

ஒருமுறை பயன்படுத்திய சமையல் எண்ணெயை மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்தக் கூடாது எனவும் ஒரு முறை பயன்படுத்தி மீதமாகும் சமையல் எண்ணெயை உணவு பாதுகாப்புத் துறை அங்கீகாரம் பெற்ற ரூகோ (மறு பயன்பாடுக்கு சமையல் எண்ணெய்) டீலரிடம் அளித்து தொகை பெற்றுக் கொள்ளலாம் என விழிப்புணர்வு செய்தார்.

இம்முகாமில் கம்பை நல்லூர், திப்பம்பட்டி, இருமத்தூர், நவலை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து சுமார் 50க்கும் மேற்பட்ட வணிகர்கள் கலந்துகொண்டனர். முடிவில் கம்பைநல்லூர் அனைத்து வணிகர் சங்க செயலாளர் லட்சுமி நாராயணன் நன்றி கூறினார்.

# திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் முகாம்



திருவெண்ணெய்நல்லூர், நவ. 18-

திருவெண்ணெய் நல்லூர் திமுக மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழகம் சார்பில வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாம் நடைபெற்றது. தமிழக முழுவதும் 16, 17 ஆகிய தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதையொட்டி திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் அரசு நடுநிலைப் பள்ளியில் திமுக மேற்கு ஒன்றியம் மற்றும் பேரூர் கழகம் சார்பில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாம் நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த முகாமினை திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கார்த்திகேயன் பார்வையிட்டார். முகாமில் 18 வயது பூர்த்தி அடைந்த புதிய வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணியில் பிஎல்ஏ 2 பாக முகவர்கள் விறுவிறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் நீக்கல் மற்றும் திருத்தம் செய்தல் ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் மேற்கு ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.விசுவநாதன், ஒன்றிய சேர்மன் ஓம்சிவசக்திவேல், மாவட்டத் துணைச் செயலாளர் கற்பகம், கிராம நிர்வாக அலுவலர்கள் சதீஷ், அப்துல் சலாம், நகர பொருளாளர் சையத் நாசர், தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை அமைப்பாளர் கிருஷ்ணராஜ், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் தேவா, வார்டு செயலாளர்கள் ரமேஷ், தண்டபாணி, பேரூராட்சி கவுன்சிலர்கள் செந்தில் முருகன், சதாம், பாக்கியராஜ், அறிவழகன், கிராம நிர்வாக உதவியாளர்கள் காந்தி, புஷ்பராஜ் உள்ளிட்ட பிஎல்ஏ 2 பாக முகவர்கள் உடன் இருந்தனர்.

# அர்ச்சகர்கள் பாதுகாப்பு அமைப்பு சார்பில் திருமுறை திவ்யபிரபந்த வளர்ச்சிப் பெருவிழா

## சாதனையாளர்களுக்கு கவர்னர், சபாநாயகர் விருது வழங்கல்



புதுச்சேரி, நவ. 18-

திவ்யபிரபந்த வளர்ச்சி பெருவிழாவில் ஆன்மிக தொண்டு செய்தவர்களுக்கு கவர்னர் கைலாஷ்நாதன் விருது வழங்கினார்.

திருக்காஞ்சி கங்கைவராக நதீஸ்வரர் கோவில் வளாகத்தில் இந்து சமய சனாதன வேத ஆகம திருமுறை திவ்யபிரபந்த வளர்ச்சிப் பெருவிழா நடந்தது.

கவர்னர் கைலாஷ்நாதன் தலைமை தாங்கினார். சபாநாயகர் செல்வம், அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுச்சேரி மாநில ஆலய அர்ச்சகர் அந்தணர்கள், பாதுகாப்பு கழக தலைவர் சரவணா சிவாச்சார்யார் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறந்த சைவாகம தொண்டிற்கான விருதுகளை திருக்கண்ணங்குடி ஞானாம்பிகை வேத சிவகாம பாடசாலை நிறுவனர் மற்றும் முதல்வர் பாலசுப்பிரமணிய சிவாச்சார்யார், காரைக்கால் ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாச்சாரிய வித்யா பீட நிறுவனர் சர்வேஸ்வர சிவாச்சார்யார், சைவ ஆராய்ச்சி மைய தலைவர் கணேசன் ஆகியோருக்கு கவர்னர் வழங்கினார். மேலும், சிறந்த ஆன்மிகப் பணிக்கான விருதுகளை திருக்காமேஸ்வரர் கோவில் திருவாசக குழு தலைவர் கோமதியம்மாள், நம்பெருமான் மாணிக்கவாசகர் சிவனடியார் திருக்கூட்ட அமைப்பு தலைவர் கலியபெருமாள் ஆகியோருக்கும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலைய சுவாமிகள், பிள்ளையார்பட்டி சிவநெறிக்கழக முதல்வர் பிச்சை சிவாச்சாரியார், திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாபீட முதல்வர் ராஜா பட்டர், தூத்துக்குடி ஆலாலசுந்தர வேத சிவகாமி வித்யாலய முதல்வர் செல்வம் உட்பட பலர் பங்கேற்றனர். புதுச்சேரி ஆலய அர்ச்சக அந்தணர்கள் பாதுகாப்பு கழக செயலாளர் ராகவேந்திரசிவம் நன்றி கூறினார்.

## கடமலை மயிலை ஒன்றியத்தில்

# போலி டாக்டர்கள் அதிகரிப்பு நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தேனி, நவ. 18-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதிக்குட்பட்ட கடமலை மயிலை ஒன்றியத்தில் போலி டாக்டர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடமலை மயிலை ஒன்றியத்துக்கு உட்பட்ட கடமலைக்குண்டு மயிலாடும்பாறை, வருசநாடு ஆகிய பகுதிகளில் படிப்பறிவு இல்லாத பலரும் தங்களை டாக்டர்கள் எனக் கூறிக்கொண்டு மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். மேலும் டாக்டரிடம் உதவியாக இருந்தவர்கள் மெடிக்கல் ஷாப் வைத்தவர்கள் மருந்து கடையில் வேலை பார்த்தவர்கள் கூட டாக்டராக வலம் வருகிறார்கள். இதனை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில சுகாதாரத்துறை அறிவுறுத்தல் வழங்கி உள்ளது. இதனை கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள சுகாதாரத்துறை நிர்வாகம் கண்டு கொள்வதில்லை. எனவே தேனி மாவட்ட நிர்வாகம் திடீரென சோதனை நடத்துவதால் மட்டுமே இதுபோன்ற தவறுகளை ஒழிக்க முடியும். எனவே மக்கள் நலனை கருத்தில் கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்க சிறப்பு முகாம்

தேனி, நவ. 18-

தேனி மாவட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்குவதற்கான மருத்துவ முகாம் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனை, சின்னமனூர் அரசு மருத்துவனை, உத்தமபாளையம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.



தேனி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பின் போது, மாற்றுத்திறனாளிகளாக புதிதாக கண்டறியப்பட்டுள்ள நபர்களுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்குவதற்காக இச்சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமில் அரசு சிறப்பு மருத்துவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவச்சான்று வழங்க உள்ளார்கள். முகாமிற்கு வருகை தரும் நபர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 4. குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு மருத்துவச்சான்று மற்றும் ஹிஞ்மிஞ் அட்டை பெற்று பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

# இலவச மருத்துவ முகாம்



தென்காசி, நவ. 18-

தென்காசி மாவட்டம் கோவிந்தப்பேரி ஞானம் மறவா நடுநிலைப் பள்ளியில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமுக்கு கோவிந்தப்பேரி ஊராட்சி மன்ற தலைவர் டிகே பாண்டியன் தலைமை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்டீபன் வரவேற்று பேசினார். மருத்துவர் டி. பி .டி.ராஜா தலைமையிலான குழு மருத்துவ பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கினார்கள். முகாமில் வனத்துறை அலுவலர் மாணிக்கம், ஊராட்சி உதவியாளர் மாரித்துரை மங்களா சுந்தர், சுப்ரமணியம், சிவா உட்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் பரிசோதனை செய்த நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டது.

# குழந்தைகள் தின விழா ஓவிய போட்டி




திருப்பத்தூர், நவ. 18-

ஏலகிரி மலையில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு ஓவிய போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரிமலை அடுத்த பள்ளக்கனியூர் பகுதியில் உள்ள தனியார் ஹோட்டலில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, ஏலகிரி மலை, வாணியம்பாடி நாட்டறம்பள்ளி, ஆம்பூர், உள்ளிட்ட அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் ஐந்தாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஓவியப்போட்டி நடைபெற்றது.

இதில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் நான்காம் வகுப்பு மாணவன் தென்னையன் தனது தனித்திறமையை வெளிப்படுத்தி முதல் பரிசு பெற்று 5 ஆயிரத்தை தட்டிச் சென்றார்.

மேலும் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு இரண்டாம் பரிசு ரூ3000 எனவும், மூன்றாம் பரிசு 2000 எனவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், மலைவாழ் மக்கள் என பலர் உடன் இருந்தனர்.

# பொதிகை புத்தகத்திருவிழாவில் நினைவு பரிசு ஆட்சியர் கமல் கிஷோர் வழங்கினார்




தென்காசி, நவ. 18-

தென்காசி இ.சி.ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 3 வது நாள் புத்தகத் திருவிழாவில் கலந்துகொண்ட எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கலைஞர்கள் மற்றும் பள்ளி, கல்லூரிமாணவ,மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் நினைவுப்பரிசு மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்ததாவது, மூன்றாவது நாள் புத்தகத்திருவிழா நிகழ்ச்சியாக, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை சார்பில் கீழப்பாவூர் வட்டார பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், கல்லூரி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள், ராஜபாளையம் உமாசங்கர் குழுவினரின் தமிழிசையும் இசைத்தமிழும் என்ற நிகழ்ச்சி, எழுத்தாளர் அகிலாண்ட பாரதி வரலாற்றுச் சிறப்புகள் என்ற தலைப்பில் சிறப்புரை, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு தலைவர் மனுஷ்யபுத்திரன் சொல்லின்றி அமையாது உலகு என்ற தலைப்பில் சிறப்புரை, கலைமாமணி கவிஞர் கலாப்ரியா கவியும் காட்சியும் என்ற தலைப்பில் சிறப்புரை, சாகித்திய அகாதமி விருதாளர் எழுத்தாளர் நாஞ்சில் நாடன் மரபும் மாண்பும் என்ற தலைப்பில் சிறப்புரை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயசந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேணுகோபால், புளியங்குடி காவல் துணை கண்காணிப்பாளர் வெங்கடேசன், மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர் பானுப்பிரியா மற்றும் அரசு உயர்அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வ.உ. சிதம்பரம் பிள்ளை நினைவு நாள்



புதுச்சேரி, நவ. 18-

"கப்பலோட்டிய தமிழன்" வ.உ. சிதம்பரம் பிள்ளை நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்ப ட்டது.

இதனையொட்டி புதுச்சேரி, பாரதிப் பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராய ணன், வேளாண் அமைச்சர் ஜெயக்குமார், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் எஆர்என் திருமுருகன், அரசு கொறடா ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கர் (எ) தட்சிணா மூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தீயணைப்பு துறை டிரைவர் டெஸ்ட் 23ம் தேதி துவங்குகிறது

புதுச்சேரி, நவ. 18-

தீயணைப்பு துறை டிரைவர் பணிக்கான டெஸ்ட் 23ம் தேதி துவங்குகிறது. நான்கு பிராந்தியங்களை சேர்ந்த 260 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

புதுச்சேரி தீயணைப்புத் துறையில் காலியாக உள்ள தீயணைப்பு டிரைவர் கிரேடு 3 பதவிக்கு ஆன்லைன் வழியாக கடந்த 2022ம் ஆண்டு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இவர்களுக்கான டிரைவர் டெஸ்ட் கடந்த பிப்ரவரி மாதம் 23, 24 ஆகிய தேதிகளில் நடக்கும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் நிர்வாக காரணங்களால் நடத்தப்படவில்லை. தள்ளி வைக்கப்பட்ட இந்த டிரைவர் டெஸ்ட் போக்குவரத்து ஆய்வாளர்கள் முன்னிலையில் வரும் 23ம் தேதி துவங்கி, அடுத்த மாதம் 8ம் தேதி வரை மேட்டுப்பாளையம் போக்குவரத்து முனைய வளாகத்தில் நடக்கிறது.

காலை 9 மணிக்கு துவங்கும் இந்த டிரைவர் டெஸ்ட்டில் வாகன ஓட்டும் திறமை, அவசர நேரத்தில் வாகன பழுது பார்ப்புதிறன் சோதிக்கப்பட உள்ளது. நான்கு பிராந்தியங்களில் இருந்து மொத்தம் 260 பேர் கலந்துகொள்ள உள்ளனர்.

புதுச்சேரி பிராந்தியத்தினை சேர்ந்த தேர்வர்கள் 23, 24, 30 டிச. 1 ஆகிய தேதிகளில் நடக்கிறது. டிச. 7ம் தேதி காரைக்காலை சேர்ந்தவர்களுக்கும், 8ம் தேதி மாகி, ஏனாம் பிராந்தியத்தினை சேர்ந்தவர்களுக்கும் டிரைவர் டெஸ்ட் நடக்கிறது. இத்தகவலை கோட்ட தீயணைப்பு அதிகாரி இளங்கோ தெரிவித்துள்ளார்.

# அன்னையின் 51ம் ஆண்டு மகா சமாதி தினம் அனுசரிப்பு




புதுச்சேரி, நவ. 18-

புதுச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தில், அன்னை வாழ்ந்த அறையை பொதுமக்கள், பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

அன்னை என்று அழைக்கப்படும் மிர்ரா அல்பாஸா, கடந்த 1878ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். அரவிந்தரின் யோக முறைகள் இவரை கவர்ந்ததால் இந்தியாவிற்கு வந்தார். அரவிந்தர் வாழ்ந்த புதுச்சேரியிலேயே தங்கி அவரது ஆன்மிக, யோக பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார்.

அரவிந்தர் ஆஸ்ரமம் மற்றும் ஆரோவில் என்ற சர்வதேச நகரை உருவாக்கினார். மேலும், அரவிந்தர் ஆசிரமத்தில் வாழ்ந்த அன்னை கடந்த 1973ம் ஆண்டு நவ. 17ம் தேதி சமாதி அடைந்தார். இந்நிலையில், நேற்று அன்னையின் 51ம் ஆண்டு மகா சமாதி தினத்தை யொட்டி புதுச்சேரி மரைன் வீதியில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்தில், ஆசிரமவாசிகளின் கூட்டு தியான நிகழ்ச்சி நடந்தது. இதனை தொடர்ந்து காலை 6 மணி முதல் 12 மணி வரை, அன்னை வாழ்ந்த அறையை பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அன்னை மகா சமாதி தினத்தை யொட்டி நேற்று புதுவையில் வாழும் அவரது பக்தர்கள், வெளி நாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழும் ஏராளமானோர் நீண்ட வரிசையில் காத்திருந்து அன்னை அறையை தரிசித்து பரவசம் அடைந்தனர்.

# யூனியன் வங்கி 106வது நிறுவன தின விழா



கோவை, நவ. 18-

யூனியன் வங்கியின் 106வது நிறுவன தின விழா கோவை சர்தார் வல்லபாய் பட்டேல் கல்லூரி அரங்கில் யூனியன் வங்கி கோவை பிராந்தியம் சார்பாக நடைபெற்றது. வங்கி சேவைகளில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும் யூனியன் வங்கியின் 106வது நிறுவன தின விழா நாடு முழுவதும் மிகவும் பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது. முன்னதாக மும்பையில் நடைபெற்ற விழாவில் யூனியன் வங்கியின் தலைமை செயல் அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குனர் மணிமேகலை 106வது நிறுவன விழாவை நினைவு கூறும் விதமாக வங்கியின் 5 புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வங்கியின் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் அவர்களது குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர். விழாவில் மும்பையில் நடைபெற்ற நிறுவன தின விழா நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. தொடர்ந்து வங்கி ஊழியர்களின் குடும்பத்தினர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியின் இறுதியாக கோவை பிராந்திய துணை பொது மேலாளர் எஸ்.எஸ். லாவண்யா நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கல்



**ஈரோடு சக்திதேவி அறக்கட்டளை சார்பில் கோவை மாவட்டம் காவல் பயிற்சி வளாகத்தில் போலீசாரின் வாரிசுகளான பள்ளி, கல்லூரி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகையினை சக்தி மசாலா நிர்வாக இயக்குநர் துரைசாமி, நடிகர் சிவகுமார், கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வழங்கினர்.**

# மன வளர்ச்சி குன்றியோர் இல்லத்தில் சபாநாயகர் செல்வம் உணவு வழக்கல்



புதுச்சேரி, நவ. 18-

புதுவை சபாநாயகர் செல்வம் மணிவிழாவை முன்னிட்டு ரெட்டியார் பாளையம் கம்பன் நகரில் உள்ள மனவளர்ச்சி குன்றியோர் இல்லத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

புதுவை மாநில சட்டப்பேரவை தலைவர் செல்வம் மணிவிழாவை முன்னிட்டு அவரது ஆதரவாளர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம், அன்னதானம் ஆகியவற்றை வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக புதுவை மாநில பாஜகவின் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு துறை மாநில தலைவர் லட்சுமி நாராயணன் தலைமையில் ரெட்டியார்பாளையம் கம்பன் நகரில் உள்ள மன வளர்ச்சி குன்றியோர் இல்லத்தில் இலவச மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட சட்டப்பேரவை தலைவர் செல்வம் கருணை இல்லத்தில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு இனிப்பு ஊட்டி மகிழ்ந்தார்.

பின்னர் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சபாநாயகர் செல்வம் அறுசுவை விருந்து பரிமாறினார். இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு துறை மாநில துணைத் தலைவர்கள் ஏழுமலை, விஷ்ணு மற்றும் உழவர்கரை பாஜக நிர்வாகி கோமதி உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# முதலியார்பேட்டை பகுதியில் மேம்படுத்தப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்

## முதல்வர் துவக்கி வைத்தார்






புதுச்சேரி, நவ. 18-

புதுச்சேரி மாநிலம், முதலியார்பேட்டை, சுதானாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் புறநகர் பகுதியின் வளர்ச்சியடைந்த பகுதிகள் ஆகும். இங்கு பல கட்டடங்களில் குடிநீர்க்குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் வழங்கல் முறைப்படுத்தப் பட்டது. நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகை, அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றால் குடிநீர் அளவும் தேவையும் பெருகியது. எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க தொலைநோக்குப் பார்வையோடு எதிர்வரும் 30 ஆண்டுகளை கணக்கில் கொண்டு குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டு, இந்த மேப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சுதானா நகரில் 20 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 10 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, நீர்உந்துக் குழாய்கள், நீர்ப்பங்கீட்டு குழாய்கள், மோட்டார் பம்ப்செட்கள், 7182 புதிய குடிநீர் இணைப்புகள் அரசு செலவிலேயே இணைத்தல் மற்றும் குழாய் பதிக்கப் பட்ட சாலைகளை செப்பணிடுதல் ஆகிய பணிகள் செயற்படுத்தப் பட்டுள்ளன. இந்த பணிகளுக்காக, ரூ.8.29 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் இதர பணிகளுக்கு HUDCO நிதிஉதவியுடனும், 2022–2024 ஆண்டுகளில் ரூ.27.27 கோடி மதிப்பீட்டில் நீர்உந்து குழாய்கள், நீர்ப்பங்கீட்டுக் குழாய்கள், குடிநீர் இணைப்புகள் மற்றும் சாலைகள் மறுசீரமைப்பு பணிக்கு கிவிஸிஹிஜி நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் சுதானா நகர், திவான் கந்தப்ப முதலியார் நகர், சுகாதார ஊழியர்கள் குடியிருப்பு, திருமாள் நகர், பாரதியார் நகர், பாக்கியம் நகர் துலுக்கானத்தம்மன் நகர், மக்கள் நகர், வேலன் நகர், ஆதிமூலம் நகர், மறைமலை நகர், கார்கில் நகர், திருமகள் நகர், ஆனந்தா நகர், நேத்தா நகர், வள்ளலார் நகர். நாகம்மாள் நகர், அரவிந்தர் நகர், அங்காளம்மன் நகர். அன்சாரி துரைசாமி நகர், அன்னை தெரசா நகர், முருங்கப்பாக்கம், நைனார்மண்டபம், வசந்த நகர், ஆதிபராசக்தி நகர், மூகாம்பிகை நகர், ராமாநுஜர் நகர், கிழக்கு வாசல் நகர், கணபதி நகர், சேத்திலால் நகர், மஹாலட்சுமி நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த சுமார் 36,200 மக்கள் பயன்பெறுவர்.

இத்திட்டம் செவ்வனே முடிக்கப்பட்டு முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு சட்டப் பேரவை தலைவர் செல்வம், அமைச்சர் லட்சுமிநாராயணன், சம்பத் எம்எல்ஏ, பாஸ்கர் எம்எல்ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் தலைமைச்செயலர் சரத் சௌகான், முனைவர் ஜெயந்தகுமார் ரே, முனைவர் தீனதயாளன், பொதுப்பணித்துறை தலைமைப்பொறியாளர், பாலசுப்பிரமணியன், கண்காணிப்பு பொறியாளர் உமாபதி, பொது சுகாதாரக் கோட்ட செயற்பொறியா ளர் சுந்தரி, உதவிப் பொறியாளர், தணிகைவேல், இளநிலைப்பொறியாளர் மற்றும் முதலியார் பேட்டை, அரியாங்குப்பம் தொகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்றனர்.

# மலேசிய உலகத்தமிழர் மாநாட்டில் முன்னாள் சபாநாயகர் சிவக்கொழுந்து தகவல்

## எதிர் காலத்தில் வேளாண்மை தொழில்தான் சிறந்த தொழிலாக உயரும்



புதுச்சேரி, நவ. 18-

மலேசிய நாட்டில் உள்ள கோலாலம்பூர் மாநாட்டு அரங்கத்தில் உலகளாவிய பொருளாதார உச்சி மாநாடு மற்றும் 11வது உலகத்தமிழர் பொருளாதார மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் வி.பி.சிவக்கொழுந்து சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார்.

விழாவில் அவர் பேசுகையில், 'தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில் கடந்த 2017ம் ஆண்டு நடந்த 4வது பொருளாதார மாநாட்டில் தொடங்கி அனைத்து மாநாட்டிலும் பங்கேற்று வருகிறேன். இது எனக்கும் எனது மாநிலத்துக்கும் பெருமையாகும். இந்த விழாவில் வேளாண்மை தொழில் தொடர்பான பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பு கொடுக் கப்பட்டுள்ளது. புதுச்சேரியிலும் வேளாண்மை தொழில் சிறப்பாக நடக்கிறது. நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக லாபம் ஈட்டும் தொழிலாக வேளாண்மையை மாற்றலாம். எதிர் காலத்தில் வேளாண்மை தொழில் தான் சிறந்த தொழிலாக உயரும். வேளாண்மைக்கு அரசுகள் அதிக நிதி ஒதுக்க வேண்டும். உற்பத்தி பொருட்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்யவேண்டும். அப்போது தான் அதிக பயன் விவசாயிக ளுக்கு போய் சேரும். இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் புதுச்சேரி மாநில முதல்அமைச்சர் ரங்கசாமி அனுப்பிய வாழ்த்து செய்தியை முனைவர் ரவி குணவதிமைந்தன் வாசித்தார். நிகழ்ச்சின் இறுதியில் கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

# அரசு அலுவலர்கள் கலந்தாய்வுகூட்டம்




**தென்காசி, நவ. 18-**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் முன்னிலையில் தென்காசி மாவட்ட வாக்காளர் பட்டியல் கண்காணிப்பு அலுவலர் விவேகானந்தன் (நிர்வாக இயக்குநர், தமிழ் நாடு நகர்புற நிதி உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்) தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் 2025க்கு 01.01.2025ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தி அடைந்தவர்களை (அதாவது 31.12.2006 அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்கள்) புதிய வாக்காளராக சேர்ப்பது தொடர்பான நடவடிக்கையாக 28.11.2024 வரை மனுக்கள் பெற திட்டமிட்டுள்ளது. இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்தால் (16.11.2024) மற்றும் (17.11.2024) ஆகிய நாட்களில் அனைத்து வாக்குசாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு படிவம் 6, 6A, 6B, 7 மற்றும் 8 ஆகியவை பெறப்பட் டுள்ளன.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் முன்னிலையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் தென்காசி மாவட்டத்திற்கு வாக்காளர் பட்டியல் கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள விவேகானந்தன் (நிர்வாக இயக்குநர், தமிழ்நாடுநகர் புறநிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்) தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், இறந்தவர்கள் பெயர்கள் நீக்குதல் ஆகியவை தொடர்பாக அரசு அலுவலர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் கேட்கப்பட்ட கருத்துகளுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் வருகின்ற (23.11.2024) மற்றும் (24.12.2024) அன்றும் வாக்குசாவடி அமைவிடங்களில் நடக்கும் சிறப்பு முகாம்களை பயன்படுத்தி 18வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்களை சேர்க்கவும், காலம் சென்ற வாக்காளர்களை நீக்கம் செய்யவும், குடியிருப்பினை மாற்றம் செய்தவர்கள் முகவரி மாற்றம் செய்யவும், புதியவாக்காளர் அடையாள அட்டை வேண்டுபவர்கள் விண்ணப்பிக்கவும், மாற்று திறனாளி வாக்காளர்கள் தங்களை மாற்றுத்திறனாளி வாக்காளர் என குறியீடு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே, வாக்காளர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தி பெயர்சேர்த்தல், பெயர் நீக்கல், முகவரி மாற்றம், போன்றவற்றிற்காக தங்களதுவாக்கு சாவடி அமைவிடங்களுக்கு நேரில் சென்று உரிய விண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்கி பயனடையு மாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். https:// voters.eci.gov.in/ என்ற இணையதள முகவரி மூலமாகவும் voter help line app என்ற கைப்பேசி செயலி மூலமாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். மேலும் இது தொடர்பான சந்தேகங்களுக்கு 04633 1950 என்ற கட்டணமில்லா தொலைப்பேசியினை தொடர்பு கொள்ளவும் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் துணை வாக்காளர்பதிவு அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து ஆய்வு கூட்டம்



**கன்னியாகுமரி, நவ. 18-**

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிக்காட்டுதலின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வருவதன் தொடர்ச்சியாக தொகுதிவாரியான வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அழகுமீனாவால் வெளியிடப்பட்டது.

01.01.2025 ஐ தகுதிநாளாக கொண்டு 18 வயது பூர்த்தியானவர்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம் மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைத்தல் தொடர்பாக சிறப்பு முகாம்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் நடைபெற்று வருகிறது.

மேற்படி பணியினை ஆய்வு செய்யும் பொருட்டு விவேகானந்தன் வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனை தொடர்ந்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் மாவட்டதேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில், வாக்காளர் பட்டியல் பார்வையாளர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகசிறு கூட்டரங்கில் வைத்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும், சிறப்பு முகாம்கள் நடைபெற்று வரும் மையங்களில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் நேரடியாக சென்று ஆய்வுமேற்கொண்டார்கள். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, பத்மனாபபுரம் உதவி ஆட்சியர் வினய் குமார் மீனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுகிதா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, அனைத்து வட்டாட்சியர்கள், அனைத்து துணை வட்டாட்சியர்கள் (தேர்தல்) மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்களை ஆட்சியர் ஆய்வு



**கன்னியாகுமரி, நவ. 18-**

கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் பிரிவின் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்த சிறப்பு முகாம்கள் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து ரணியல் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் இரணியல் அரசு நடுநிலைப்பள்ளிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2025ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் (31.12.2006 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பிறந்தவர்கள்), விடுபட்ட வாக்காளர்கள் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவும், வாக்காளர் பட்டியலில் பெயர்நீக்கம், திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண் இணைத்தல் ஆகியவைகளை மேற்கொள்ளவும் ஏதுவாக வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2025 கால அட்டவணையை வெளியிட்டுள்ளது.

அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு ான வரைவு வாக்காளர் பட்டியல் 29.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

இந்தியதேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், தொகுதி, முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண்ணை வாக்காளர் அடையாள அடடையுடன் இணைத்தல் தொடர்பாக சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது எனவே மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பொதுமக்கள் வாக்காளர் சிறப்பு முகாம்களை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வாக்காளர்கள் தங்களது சந்தேகம், கோரிக்கைகள் தொடர்பான விபரங்களை வாக்காளர் கட்டணமில்லா தொலைபேசி எண் 1950ஐ தொடர்பு கொண்டு தெரிந்துக்கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்கள். ஆய்வில் கல்குளம் வட்டாட்சியர் சஜித், வாக்குச்சாவடி அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# 10 மாவட்டங்களுக்கு இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பு வானிலை ஆய்வு மையம்

**சென்னை, நவ. 18-**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. அதன்படி பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் 10 மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி

தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இன்றும், நாளையும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்து வரும் நிலையில், நாளை வரை தொடரும் என கணிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது. நகரின் அதிகபட்ச வெப்பநிலை 3233 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் நவம்பர் 24ந் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம்



**சுவாமிமலை, நவ. 18-**

கும்பகோணம் மாநகரம் மகாமகம் பகுதி கழக அதிமுக செயல் வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் மகாமகம் பகுதி கழகச் செயலாளர் ராஜு தலைமையில் நடைபெற்றது. பகுதி கழக அவைத் தலைவர் ஜெயசீலன் வரவேற்றார். மாநகர கழக செயலாளர் ராம. ராமநாதன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக கழக அமைப்பு செயலாளர் திருச்சி மனோகரன், தஞ்சை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பாரதி மோகன், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சேகர், அம்மா பேரவை இணைச் செயலாளர் அசோக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். இந்த கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கும்பகோணம் அறிவழகன், திருவிடை மருதூர் தெற்கு முத்துக் கிருஷ்ணன், மாநில கைத்தறி பிரிவு செயலாளர் லெனின், தகவல் தொழில்நுட்ப பிரிவு தஞ்சை மண்டல செயலாளர் அறிவொளி, பொற்றாமரை பகுதி கழக செயலாளர் குமரேசன், மகாமகம் பகுதி கழகத் துணைச் செயலாளர் ஜான், முன்னாள் ஒன்றிய செயலாளர் சின்னையன், மாவட்ட பிரிவு செயலாளர்கள் செல்வராஜ், கிருஷ்ண மூர்த்தி, கவிதா ஸ்ரீதர், ராஜேந்திரன், சரவணன், கஞ்சனூர் பிரபு, மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் ராஜ நடராஜன், பகுதி கழகத் துணைச் செயலாளர் பெருசு ராம மூர்த்தி, ஐடி விங் மண்டல இணை செயலாளர் ரமேஷ் குமார், துணை செயலாளர் பாலாஜி, மாவட்டத் துணைத் தலைவர் சுந்தர பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் விக்கி, மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் ரவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாநகர அம்மா பேரவை செயலாளர் அயூப்கான் நன்றி கூறினார்.

# வில்லியனூர் தொகுதியில் 41 பயனாளிகளுக்கு வீடுகட்டும் தவணைத் தொகை ஆணை

## எதிர்க்கட்சி தலைவர் சிவா வழங்கினார்



**புதுச்சேரி, நவ. 18-**

குடிசைமாற்று வாரியம் மூலம் வில்லியனூர் தொகுதியை சேர்ந்த 41 பயனாளிகளுக்கு ரூபாய் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வீதம் மொத்தம் 33 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வீடு கட்டும் முதல் மற்றும் மூன்றாம் தவணைத் தொகையை அவரவர் வங்கி கணக்கில் செலுத்தியதற்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடந்தது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான சிவா கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வீடு கட்டும் தொகைக்கான ஆணையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குடிசைமாற்று வாரிய செயற்பொறியாளர் சுந்தரராஜன், உதவி பொறியாளர் ரவி, இடைநிலைப் பொறியாளர் அணில் குமார் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, தர்மராஜ் அவைத் தலைவர் ஜலால் அணிப், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், விவசாய அணி துணை அமைப்பாளர் ராமதாஸ், கோபி. தொமுச பேரவை தலைவர் அங்காளன், ஆதிதிராவிட அணி துணைத் தலைவர் கதிரவன், துணை அமைப்பாளர் காளி, தொகுதி துணைச் செயலாளர்கள் ஹரி கிருஷ்ணன், ஜெகன்மோகன், தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் ஏழுமலை, சுப்பிரமணியன், ராஜி, சபரி, சக்திவேல், மிலிட்டரி முருகன், ராஜா முகமது, சுரேஷ், முருகன், சேகர், பாலகுரு, வீரக்கண்ணு, கார்த்திகேயன், பாலமுருகன், மனோகர், முத்து, தட்சணாமூர்த்தி, ராமஜெயம், ராஜேந்திரன், ஜீவா, கோவிந்தராஜ், மனோ, அபிமன்னன், நடராஜன், வேல்முருகன், ரமேஷ், சிலம்பு ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக ஆலோசனை



**சேலம், நவ. 18-**

சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையாளர் ஆனந்த குமார் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி முன்னிலையில் வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் 2025 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஆனந்தகுமார் தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சேலம் மாவட்டத்தில் கடந்த 29.10.2024 ல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு வரும் 01.01.2025ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணி 29.10.2024 முதல் துவங்கப்பட்டு படிவங்கள் 28.11.2024 வரை பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டு இறுதி செய்து 06.01.2025 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் சேலம் மாவட்டத்தில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள், அனைத்து உதவி பதிவு அலுவலர்கள் மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர்கள் ஆகியோருடன் இந்த ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இக்கூட்டத்தில் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2025ல் பெறப்பட்ட படிவங்கள் குறித்தும், களப்பணி குறித்தும், சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தத்திற்கான படிவங்கள் குறித்தும் வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2025ல் பெறப்பட்ட படிவங்கள் இறுதி செய்யப்பட்டு சரியான வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் முகாம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தப் பணிகள் முழுமையாக கண்காணித்து சிறந்த முறையில் இப்பணியினை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாறு சேலம் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையாளர் மரு.ஆர். ஆனந்தகுமார் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் 2025 தொடர்பாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு சிறப்பு முகாமினையும், அதனைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்த சிறப்பு முகாம் நடைபெற்று வரும் வாக்குச் சாவடி மையங்களில் ஒன்றான சேலம், மஜ்ரா கொல்லப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், சேலம் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையாளர் ஆனந்தகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வில் சேலம் மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மேட்டூர் சார் ஆட்சியர் நே.பொன்மணி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சிவசுப்பிரமணியன் சேலம், ஆத்தூர், சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர் (தேர்தல்) முருகேசன் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# பெண்களையும் தொழில் முனைவோராக உருவாக்க சிறப்பான திட்டத்தை உருவாக்கிய முதல்வர்

## கன்னியாகுமரி மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



**கன்னியாகுமரி, நவ. 18-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில், இது நமது அரசு என்று பொதுமக்கள் அனைவரும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

அதன் ஒருபகுதியாக ஊரக பகுதி மக்களின் வறுமையை குறைக்கும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் சுய உதவிக்குழு அமைப்புக்களை உருவாக்கி, பயிற்சியளித்து, சுழல் நிதி வழங்கி, வங்கிக்கடன் இணைப்புக்களை ஏற்படுத்தி. தொழிற்பயிற்சி அளித்து, உற்பத்தி பொருட்களை கண்கவரும் வகையில் பேக்கிங் செய்து விற்பனை செய்திட உள்ளூர், பெருநகரங்கள், தலைநகரம், தேசிய அளவில் மேலும் இணைய வழி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வறுமையை குறைத்து வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சுய உதவிக்குழுக்களில் இணைந்த பெண்களுக்கு பல்வேறு விதமான கைவினைப்பொருட்கள் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல், காளான்வளர்ப்பு குறித்த பயிற்சிகள், சந்தைப்படுத்தல், அச்சகம், நர்ஸரி உள்ளிட்ட தொழில்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பயிற்சிகள் முடிந்த பின் அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு சுழல் நிதி, சமூக முதலீட்டு நிதி. நலிவு குறைப்பு நிதி, கூட்டமைப்பு ஊக்க நிதி, வாழ்வாதார நிதி, பண்ணைசார் திட்ட நிதி, வட்டார வணிக வள மைய நிதி மற்றும் பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்ட நிதி என பல்வேறு வகையான நிதியுதவிகள் தமிழ்நாடு அரசின் மூலம் அளிக்கப்படுகிறது. மேலும் பெண்களிடையே நிதி சுழற்சியை அதிகப்படுத்தும் வகையில் வங்கிக்கடன். வங்கிப்பெருங்கடன், தனி நபர் தொழில் முனைவு கடன் ஆகிய கடன் வசதிகள் வங்கிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பெண்களுடைய தொழில் முனைவு திறனை அதிகப்படுத்துவதற்கு உரிய பயிற்சி, தொழில் திட்டம் தயாரித்தல், சிறு குறு தொழில் நிறுவனப்பதிவு, தொழிற்கடன், தனிநபர் காப்பீடு, இயந்திரங்கள் சந்தைப்படுத்துவதற்காகவும் பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்து பெண்களை வறுமையிலிருந்து மீட்பதுடன் வாழ்க்கை தரம் உயர்வதற்கும் வழி வகுத்துள்ளார்கள்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம் காப்பீடு, மூலதன மானியம் பெறுதல், வட்டி மானியம் பெறுதல், உற்பத்தி பொருட்களை சந்தைபடுத்துதல் போன்ற வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழு கூட்டமைப்புகள், சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள். வங்கிக்கடன் ஒருங்கிணைப்பாளர்கள் பண்ணை சார் மற்றும் பண்ணைசாரா சமுதாய வளப்பயிற்றுநர்கள் சேவையாற்றி வருகின்றனர். இதற்கென ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சுய தொழில் பயிற்சி மற்றும் தொழில் முனைவு கடன் தேவையுள்ள ஊரக பகுதி மகளிர் அனைவரும் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்களை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். என்றார்.






நிறைந்தது மனது நிகழ்ச்சியின் கீழ் காளான் வளர்ப்பு தொழிலில் பயனடைந்த திருப்பதிச்சாரம் ஊராட்சி பகுதியை சார்ந்த திருவாழி மார்பன் சுயஉதவிக்குழுவை சார்ந்த உறுப்பினர் வேணி தெரிவிக்கையில்: நான் தோவாளை வட்டாரம், திருப்பதிச்சாரம் ஊராட்சியில் காளாண் உற்பத்தி தொழில் செய்து வரும் திருவாழி மார்பன் சுய உதவிக்குழுவை சேர்ந்த நான், கடந்த பல வருடங்களாக மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வருகிறேன். ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்பு கூட்டங்களில் கலந்து கொண்டபோது, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்கள் தமிழ்நாடு அரசு சுய உதவிக்குழு பெண்களின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் பயிற்சிகள் மற்றும் நிதியுதவி செய்து வருவதாகவும், அதற்கான விருப்பமுள்ளவர்கள் ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்பின் வழியாக வட்டார அளவில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார்கள். அதனடிப்படையில் நானும் எனது ஊரைச்சேர்ந்த சத்யா, சுபா, லட்சுமி நாங்கள் நால்வரும் காளான் வளர்ப்பு தொழிலில் ஈடுபட பயிற்சி மற்றும் நிதியுதவி அளிக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலகம், பூதப்பாண்டியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பித்தோம். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் காளாண் வளர்ப்பு தொடர்பாக ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் மற்றும் திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. பயிற்சியில் காளாண் வளர்ப்பது எப்படி? காளாண் வளர்ப்பு கூடாரம் அமைப்பது, எப்போதும் ஒரே சீரான வெப்பநிலையை பராமரிக்க என்ன செய்யவேண்டும்? நோய் தொற்று எப்படி ஏற்படும்? முன்னெச்சரிக்கை மற்றும் விளைச்சல் பாதிக்கப்படாமல் இருக்க பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி தெரிந்து கொண்டோம். மேலும் காளாண் விதை உற்பத்தி எப்படி செய்ய வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டோம். பயிற்சியினை தொடர்ந்து தொழில் செய்வதற்கான இடம் மற்றும் நிதியுதவி கேட்ட போது ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பண்ணை சார் தொகுப்பு திட்டத்தின் கீழ் காளாண் வளர்ப்பு அலகு அமைத்திட ரூ.1 லட்சம் நிதியுதவி அளித்தார்கள். தற்போது திருப்பதிசாரம் ஊராட்சி கிராம பொது சேவை மையத்தின் ஒருபகுதியில் உற்பத்திக்கான கட்டமைப்பை ஏற்படுத்தி காளாண் உற்பத்தி செய்து வருகிறோம். ஒரு சுழற்சிக்கு 45 பைகள் வீதம் காளாண் உற்பத்தி துவங்கப்படுகிறது. ஒரு பை ஒன்றுக்கு அதிகபட்சம் ஒன்றரைக்கிலோ வீதம் விளைச்சல் கிடைக்கிறது. கிலோ ஒன்றுக்கு ரூ.300 வீதம் விற்பனை செய்கிறோம். உள்ளூர் விற்பனையுடன் நாகர்கோவில் சந்தையில் உள்ள கடைகளுக்கும் விற்பனை செய்கிறோம். சுழற்சி ஒன்றுக்கு ரூ.20000 முதல் ரூ.23000 கிடைக்கிறது. வீட்டு வேலை மற்றும் இதர வேலைகளோடு இது ஒரு பகுதி நேர வருமானம் தருகிறது. துவக்கத்தில் இது சாத்தியப்படுமா? என்ற சந்தேகத்தோடு தான் இருந்தோம். இப்போது காளாண் வளர்ப்பு பற்றி முழுமையாக அறிந்த கொண்டதுடன் அடுத்து கட்டமாக உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகப்படுத்த ஆர்வமாக உள்ளோம். என்போன்ற சாதாரண குடும்ப பெண்களையும் தொழில் முனைவோராக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நிறைந்த மனதுடன் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்றார்.



தொகுப்பு:-
**ஜாண் ஜெகத் பிரைட்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**செல்வலெட் சுஷ்மா**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

# நடிகை கஸ்தூரி ஜாமீன் கோரி மனு தாக்கல்

**சென்னை, நவ. 18-**

பிராமணர் உள்பட அனைத்து சமுதாய மக்களுக்கும் பி.சி.ஆர். எனப்படும் வன்கொடுமை தடுப்பு சட்டம் தேவை என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் கடந்த 3ந் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்டார். அவர் பேசும்போது, தெலுங்கு பேசும் பெண்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசினார்.

அவருடைய இந்த பேச்சு தெலுங்கு மக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அவருக்கு எதிராக கண்டன குரல்களும் எழுந்தன. இதைத்தொடர்ந்து நடிகை கஸ்தூரி தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தார். அதே வேளையில் கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்க கோரி பல்வேறு போலீஸ் நிலையங்களில் புகார் செய்யப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்குகளில் இருந்து தனக்கு முன்ஜாமீன் கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் நடிகை கஸ்தூரி மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து கஸ்தூரியை கைது செய்யும் நடவடிக்கையில் எழும்பூர் போலீசாரும், மதுரை போலீசாரும் தனிப்படை அமைத்து களம் இறங்கினர்.



நடிகை கஸ்தூரி தெலுங்கானா மாநிலம் ஐதராபாத் அருகே உள்ள பப்பலக்குண்டா பகுதியில் சினிமா தயாரிப்பாளர் ஹரிகிருஷ்ணனின் பங்களாவில் தங்கி இருக்கும் தகவல் எழும்பூர் தனிப்படை போலீசாருக்கு கிடைத்தது. அதன்பேரில் அங்கு சென்ற தனிப்படை போலீசார் கஸ்தூரியை நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதைத்தொடர்ந்து கஸ்தூரியை கார் மூலம் நேற்று பகலில் சென்னை அழைத்து வந்தனர். அவரிடம், சிந்தாதிரிப்பேட்டை துணை கமிஷனர் அலுவலகத்தில் சுமார் ஒரு மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிந்தவுடன், அவரை எழும்பூர் 5வது கோர்ட்டு விடுமுறை மாஜிஸ்திரேட்டு ரகுபதி ராஜா முன்னிலையில் போலீசார் ஆஜர்ப்படுத்தினர்.

அப்போது நான் தனிமையில் வசித்து வருகிறேன். கணவர் ஆதரவு கிடையாது. நான் தலைமறைவாகவில்லை. என்னுடைய சென்னை வீட்டில் போலீசார் சம்மன் ஒட்டியது எனக்கு தெரியாது. என்னை சிறையில் அடைத்தால் எனது குழந்தை பரிதவிப்புக்கு ஆளாகும். எனவே என்னை சிறையில் அடைக்காமல், ஜாமீனில் விடுதலை செய்யுங்கள் என நடிகை கஸ்தூரி வேண்டுகோள் வைத்தார்.

ஆனால் அவருடைய வேண்டுகோளை மாஜிஸ்திரேட்டு நிராகரித்து அவரை வருகிற 29ந் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதையடுத்து நடிகை கஸ்தூரி புழல் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த நிலையில், நடிகை கஸ்தூரி ஜாமீன் கோரி சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். கஸ்தூரி தரப்பு வழக்கறிஞர் டி.ஆர்.பிரபாகரன் ஜாமீன் மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த ஜாமீன் மனு நாளை மறுநாள் விசாரணைக்கு வருகிறது.

# 2026 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணியா?-தவெக மறுப்பு

**சென்னை, நவ. 18-**

தமிழக வெற்றிக் கழக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் கழகத்தின் கொள்கைகள், கொள்கை எதிரி, அரசியல் எதிரி, தேர்தல் நிலைப்பாடு குறித்தும் தமது உரையில் கழகத் தலைவர் விஜய் தெளிவாக, விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். கழகத் தலைவர் விஜய்யின் வழிகாட்டுதலின்படி தமிழக வெற்றிக் கழகம், வரும் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் வெற்றிபெற்று ஆட்சி அமைப்பதற்கான அனைத்து வியூகங்களையும் வகுத்து, தேர்தலைச் சந்திக்கத் தயாராகி வருகிறது. இச்சூழலில், 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆடசி மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியாக, ஒட்டுமொத்த தமிழக மக்களின் ஏகோபித்த வரவேற்பையும் ஆதரவையும் பெற்று, மக்கள் மத்தியில் தமிழக வெற்றிக் கழகம் அடைந்து வரும் எழுச்சியை மடைமாற்றம் செய்யும் உள்நோக்கத்தோடு, அடிப்படை ஆதாரமற்ற தகவல்களைக் கொண்டு அதிமுகவுடன் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி என்று தொடர்புப்படுத்தி, பிரதான தமிழ் நாளிதழ் ஒன்று உண்மைக்கு முற்றிலும் புறம்பான தகவல்களைக் கொண்டு நேற்றுத் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி, முற்றிலும் தவறானது. ஆதாரமோ அடிப்படையோ அற்றது. ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக அரசியல் விமர்சகர்கள் என்கிற போர்வையில் உள்நோக்கத்தோடு, தான்தோன்றித்தனமாகச் சிலர் தெரிவிக்கும் பொய்யான கருத்துகளின் அடிப்படையில் தமிழக வெற்றிக் கழகத்தைத் தொடர்புப்படுத்திப் பரப்பப்படும் இது போன்ற உண்மைக்கு மாறான பொய்ச்செய்திகளைத் தமிழக மக்கள் புறக்கணித்து விடுவார்கள் என்பதை இத்தகையப் பொய்யானச் செய்திகளை உள்நோக்கத்தோடு பரப்புபவர்களுக்கு நினைவூட்டுகிறேன். தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பாதை, முழுக்க முழுக்கத் தமிழக மக்களின் நலனுக்கானது. வெற்றிக் கொள்கைத் திருவிழாவில் கழகத் தலைவர் விஜய் ஆற்றிய உரையில் தெரிவித்த நிலைப் பாட்டின் அடிப்படையில் பெரும்பான்மை பலத்தோடு நாட்டு மக்களின் பேராதரவோடு வென்று தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கான நல்லரசை அமைப்பதே தமிழக வெற்றிக் கழகத்தின் குறிக்கோள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# 16வது நிதி ஆணையக்குழுவுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

## இலங்கை பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவியேற்பு

## தங்கம் விலை திடீர் உயர்வு

# அதிமுகவுடன் கூட்டணி இல்லை–தவெக மறுப்பு


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 18-11-2024 திங்கள்கிழமை •வெளியூர்: 19-11-2024 செவ்வாய்க்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்